வேற்றப்பட்டு வருகின்றன. மூன்று திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. குடகனறு கீழ்ப் பகுதியிலுள்ள வல்லியணைப் பகுதிகளுக்கு பாசன வசதி செய்வது பற்றி மறு பரிசீலனை செய்யுமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறர்.

பெரியாறு அபிவிருத்தித் திட்டம்.

*** 277 வின—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டத்துக்காக போடப்பட்டுள்ள மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது அதற்கான துவக்க வேலைகள் நடைபெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 1966-67-ஆம் வருடத்தில் பெரியாறு அபிவிருத்தி திட்டத்திற்காக போடப்பட்ட மதிப்பீடு ரூபாய் 4 கோடியே 25 லட்சம்.

(இ) இந்தத் திட்டம் மத்திய நீர் மின் விசைக் குழுவின் ஒப்புதலும் அரசின் அனுமதிப்பும் கிடைத்தபின் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, பெரியாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால், அதனல் ஏற்படக்கூடிய நன்மைகள் யாவை? குறிப்பாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் தினசரி வீணுகிற 100 கன அடித் தண்ணீரை மிதப்படுத்தி, 10,000 ஏக்கர் வரை புதிய பாசனம் செய்யலாம் என்று திட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே? இதை வெகு விரைவாக நிறைவேற்ற மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இந்த ஆண்டு வேலை துவக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பெரியாறு மேம்பாட்டுத் திட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். வைகை ஆற்றின் இடது பக்கத்தில் வைகை அணையிலிருந்து பேரணை பொறி மதகிற்கு காரை பூசப்பட்ட, பதிய இணைப்புக் கால்வாய் ஒன்று வெட்டுவதற்கு முதல் பகுதி வகை செய்கிறது. தற்போது வைகை ஆற்றில் மணற் படுகையில் நீர் கொண்டு செல்கையில் சுமார், 1,350 மில்லியன் கன அடி நீர் விரயமாவது இந்த ஏற்பாட்டினல் தவிர்க்கப்பட்டு, அந்த நீர் 9,500 ஏக்கர் புதிய ஆயக்கட்டிற்குப் பாசனமளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவது, பெரியாறு தலைக் கால்வாய், அதன் நான்கு பெரிய கிளைக் கால்வாய்களுக்கும் காரை பூசுதல், மதகுகள், பொறி மதகுகள் முதலியவற்றிற்கு மேம்பாடுகள் செய்தல் ஆகிய திட்டம். இதன் மூலம் 21,500 ஏக்கருக்குப் பாசனமளிக்க இயலும். மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேம். கடைசியாக தலைமைப் பொறியாளரின் தொடக்க குறிப்புகளுக்காக அறிக்கை மத்திய நீர் மின்சக்தி ஆணைக் குழுவுக்கு 18--4--1970-ல் அனுப்பப்பட்டது. மத்திய நீர் மின்விசைக் குழுவின் அனுமதி பெற்றவுடன் வேலை துவக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு அபிவிருத்தித் திட்டத்தை ஒட்டியே மதுரையில் புதிய அணைக் கட்டு ஒன்று நான்கு கோடி ரூபாயில் அமைக்க பரிசீலனையில் இருக்கிறதா? அதன் மீது முடிவு எப்பொழுது எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

தென்காசி, ராஜபாளையம் பகுதிகளுக்கு பாசன வசதிகள்.

*278 வினு—**திரு. மு. முத்தையா:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியிலிருந்து ராஜபாளையம் வரை ஓடிக்கொண்டிருக்கிற சிறு சிறு ஆறுகளை பரிசிலனை பண்ணுவதற்கு தனியாக அதிகாரிகளை நியமித்து பாசன வசதிக்கு பயன்படுத்தி விவசாயத்தை பெருக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இடமில்லை.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல் வேலி மாவட்டத்தில் பொதிகை மலையில் பல சிறிய நதிகள் மிக வேகமாக ஓடுகின்றன. சில நதிகள் கேரள எல்லையில் ஓடியும் அங்கேயும் பயன் படாமல் இருக்கின்றன. அவற்றை அரசு பரிசிலனையில் எடுத்து, கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, அணைக்கட்டுகள் கட்டுவதன் மூலம் திருநெல்வேலியை வளப்படுத்த முயற்சி எடுக்கப்படுமா? அதைப் பரிசிலனை செய்ய ஒரு குழுவை புதிதாக நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: அத்தகைய கருத்தும் அரசாங் கத்திலே ஆலோசனையில் இருக்கிறது. கேரள சர்க்காரோடு கலந்தாலோசித்து, தண்ணீர் கிடைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. அதில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் கருத்தும் இருக்கிறது.

Fuel for Departmental vehicles.

*279 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that instructions have been issued to the Revenue and other departments of the Government of Tamil Nadu that motor fuel required for the departmental vehicles should be purchased only from Indian Oil Corporation consumer pumps belonging to the Government departments; and

(b) if so, whether the departmental consumer pumps are supplying the required quantity of motor fuel even during night times for the departmental vehicles?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) ஆம்.